## வாலாஜாபேட்டை நகராட்சி

### 2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 330 மணி அளவில் நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்

<table>
<tr><th>மன்றகூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>28.10.2024</td><td>பொருள் எண்.1<br>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தூய்மைப்பணிகளை மேற்கொள்ள கடந்த 30.08.2024 அன்று நகரமன்றத்தின் அனுமதியின்படி இரண்டு மகளிர் மற்றும் இரண்டு ஆண்கள் சுயஉதவி குழுவின் மூலமாக 89 தூய்மைப்பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள அனுமதி பெற்றதின் அடிப்படையில் கீழ்கண்ட 4 சுயஉதவி குழுக்களின் தூய்மைப்பணியாளருக்கு தினகூலியாக ரூ.421/- ஊதியத்தில் பணியமர்த்தவும் இத்தொகையில் பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய EPF மற்றும் ESI காப்பீட்டு தொகை செலுத்தவும் சம்மதம் தெரிவித்துள்ளதின் அடிப்படையில், மூன்று (3) சுயஉதவி குழுவிற்கு தலா25-ம், ஒரு சுய உதவிக்குழுவிற்கு 14-ம் ஆக மொத்தம் 89 தூய்மைப்பணியளார்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள 1)பாரத மாதா பெண்கள் சுயஉதவிக்குழு, 6/16, புதுப்பேட்டை தெரு, கஸ்பா, ஆற்காடு 25 நபர்கள், 2)துளசி ஆண்கள் சுயஉதவிக்குழு, ஆசாத் தெரு, ஆற்காடு, 25 நபர்கள் 3)மல்லிகை பூ பெண்கள் சுயஉதவிக்குழு, எண்.18, காய்க்கார தெரு, ஆற்காடு, 25 நபர்கள் 4)அன்னை அஞ்சுகம் ஆண்கள் சுய உதவிக்குழு, எண்.52, கொல்லபாளையம், ஆற்காடு 14 நபர்கள், 01.09.2024 முதல் பணியமர்த்தி அடுத்த டெண்டர் செயல்முறை உத்திரவு பிறப்பிக்கும் வரை மேற்கண்ட நான்கு சுயஉதவிக்குழுக்கள் மூலம் தூய்மைப்பணிகளை தொடர்ந்து செய்ய பணி உத்திரவு வழங்கவும், நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள். 31.08.2024ன்படி பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1. அனுமதிக்கலாம்<br>2. சுயஉதவிக்குழு தூய்மைப்பணியாளர்களின் மாத ஊதியத்தினை வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2867/2018/எச்1)</td><td>நகரமன்ற தீர்மானம் எண்.580 மன்றம் அனுமதிக்கப்பட்டது,</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 28.10.2024 | **பொருள் எண்.2**<br>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நகரமன்ற தீர்மான எண். 561 நாள். 30.08.2024ல் சுயஉதவி குழுவின் மூலமாக 89 தூய்மைப்பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதின்பேரில் பெற்றதின் அடிப்படையில், 4 சுயஉதவி குழுக்களின் தூய்மைப்பணியாளருக்கு தினகூலியாக ரூ.421/- ஊதியத்தில் பணியமர்த்தவும் 01.09.2024 முதல் பணியமர்த்தி தூய்மைப்பணிகளை தொடர்ந்து செய்ய பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி குழுக்களின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லை என்றும் பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்த வண்ணம் இருப்பதாலும் நகர மன்ற தலைவர், நகர மன்ற துணை தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் தங்களின் 24.09.2024-ந் தேதிய கடிதங்களில் ஆட்சேபணை தெரிவித்துள்ளதன் அடிப்படையில் 1)பாரதமாத பெண்கள் சுயஉதவிக்குழு, 2) துளசி ஆண்கள் சுயஉதவிக்குழு, 3)மல்லிகைபூ சுயஉதவிக்குழு 4)அன்னை அஞ்சுகம் சுயஉதவிக்குழு மேற்படி நான்கு குழுக்களுக்கு 01.09.2024 முதல் 30.09.2024 வரை மட்டும் தூய்மைப்பணி செய்ய அனுமதிக்கப்படுகிறது.<br>கீழ்கண்ட உள்ளூர் சுய உதவிக்குழுக்கள் ESI & PF பணம் செலுத்தி தூய்மைப்பணி மேற்கொள்ள விருப்ப கடிதம் தெரிவித்துள்ளனர்.<br>1. அகல் விளக்கு மகளிர் சுயஉதவிக்குழு, எண்.3, கோமுட்டி தெரு, வாலாஜாபேட்டை<br>2. வெளிச்சம் மகளிர் சுயஉதவிக்குழு, எண்.27, பல்லிவெங்கடாசலபதி தெரு, வாலாஜாபேட்டை.<br>3. வானவில் ஆண்கள் சுயஉதவிக்குழு, எண்.05, கோமுட்டி தெரு, வாலாஜாபேட்டை.<br>4. விடியல் ஆண்கள் சுய உதவிக்குழு, எண்.11/1, இலாலாபேட்டை தெத்து தெரு, வாலாஜாபேட்டை.<br>நகராட்சியில் தூய்மை பணிகள் பாதிப்படைவதால் பொதுமக்களின் நலன் கருதி தூய்மைப் பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டியதின் அவசரம் அவசியம் கருதி 1.10.2024 முதல் புதிய நான்கு சுய உதவி குழுக்கள் 1)அகல் விளக்கு மகளிர் சுயஉதவிக்குழு, எண்.3, கோமுட்டி தெரு, வாலாஜாபேட்டை 25 நபர்கள், 2)வெளிச்சம் மகளிர் சுயஉதவிக்குழு, எண்.27, பல்லிவெங்கடாசலபதி தெரு, வாலாஜாபேட்டை, 25 நபர்கள் 3)வானவில் ஆண்கள் சுயஉதவிக்குழு, எண்.05, கோமுட்டி | நகரமன்ற தீர்மானம் எண்.581 மன்றம் அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தெரு, வாலாஜாபேட்டை 25 நபர்கள் 4) விடியல் ஆண்கள் சுய உதவிக்குழு, எண்.11/1, இலாலாபேட்டை தெத்து தெரு, வாலாஜாபேட்டை, 14 நபர்கள் (மொத்தம் 89 நபர்கள்) மூலமாக 01.10.2024 முதல் பணியமர்த்தி அடுத்த டெண்டர் கோரி பணி உத்திரவு பிறப்பிக்கும் வரை மேற்கண்ட நான்கு சுயஉதவிக்குழுக்கள் மூலம் தூய்மைப்பணிகளை தொடர்ந்து செய்ய நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. சுயஉதவிக்குழு தூய்மைப்பணியாளர்களின் மாத ஊதியத்தினை வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 1348 /2024/எச்1) | |

(ஓம்) ஹரிணி தில்லை
நகரமன்ற தலைவர்,
வாலாஜாபேட்டை நகரமன்றம்.

//உண்மை நகல்//

28/10/2024

ஆணையாளர் (மு.கூ.பொ),
வாலாஜாபேட்டை நகராட்சி